# THE
# VALUE AND COUNTLESS
# BENEFITS OF
# HAND - POUNDED RICE.

BY

K. CHIDAMBARANATHA MUDALIAR,

LAND-LORD, SHIYALI.

Published on the occasion of the
Opening of the

Hand-Pounded Rice Godown,

SHIYALI.

உ

சிவமயம்.

## கைக் குத்தரிசியின்

# நன்மையும் உயர்வும்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் தேவாரம்.

தென்திருமுல்லைவாயில் பதிகம்.

*பண்—பியந்தைக்காந்தாரம்.*

நெஞ்சார நீடு நினைவாரை மூடு
வினைதேய நின்ற நிமலன்
அஞ்சாடு சென்னி யரவாடு கையன்
அனலாடு மேனி யரனூர்
மஞ்சாடு மாட மனைதோறு மைய
முளதென்று வைகி வரினுஞ்
செஞ்சாலி நெல்லின் வளர்சோ றளிக்கோள்
திருமுல்லை வாயி லிதுவே.

திருஞானசம்பந்தப்பெருமான் இந்தத் தேவாரத்தினல், திருமுல்லைவாயிலிலுள்ள கொடையாளர்கள்

அன்னதானம்செய்து புண்ணியத்தையும், புகழையும் பெறுகிறார்கள் என்று பாடும்போது செந்நெல் அரிசிச் சோறு என்று விதந்து கூறுகின்றார். அந்த அரிசி அக்காலத்தில் ஸ்திரீகளின் கையால் குத்திப் பக்குவம் செய்யப்பட்டது. அத் தொழில் பல்கி வளருமாறு திருஞானசம்பந்தர் ஆசீர்வாதத்தைப் பிரார்த்திக்கின்றோம்.

இந்தியாவில் தொன்றுதொட்டு அரிசி ஒருமுக்கியமான ஆகாரமாய் இருந்து வருகிறது. நமது ஆரோக்கியம், தேகவலிமை, அறிவு எல்லாவற்றிற்கும் மூலகாரணம் நாம் உண்ணும் உணவே. பொதுவாக இந்தியர்களில் மேன்மக்களாயுள்ளவர்கள் பளபளப்பான மில்லரிசியின் மோகத்தால் கட்டுண்டவர்களாய், கைகளினால்குத்தப்பட்ட அரிசி நிறங்குறைந்திருப்பதால், அதிலுள்ள வைடமின் (Vaitamin) என்னும் சத்தைப் புறக்கணித்து, தங்கள் ஆகாரத்தின் சாரமான பெரும் பாகத்தை இழந்துவிடுகிறார்கள். இது எப்படி இருக்கின்றதென்றால், நிறமும் ருசியும் அற்ற சுத்த ஜலத்தைப் பருகாமல் நிறத்தோடும் இனிமையோடும்

கூடிய சோடா, லெமனேட் முதலிய பானங்களைப் பருகுவதை ஒக்கும்.

இன்னும், கவி இரவீந்திரநாதர் விஸ்வ பாரதி பத்திரிகையில் வங்காளிகள் கைக் குத்தரிசியின் பெருமையை அறியாது மில்லரிசியை உபயோகிப்பதைப் பலவகையிலும் கண்டித்து எழுதுகிறார்.

நாடெங்கும் பரவிவரும் மலேரியாவையும் பெருகிவரும் அரிசி மில்களையும் காலதூதர்கள் என்று கவி இரவீந்திரர்கூறுகிறார். நெல்லை வேகவைத்தும், அரிசியிலுள்ள வைடமினின் பெரும்பாகத்தை இயந்திரத்தினால் போக்கியும், சாரமில்லாமல் சக்கையாய்ப் பளபளப்புள்ள மில்லரிசியை உபயோகிப்பதனால் தேசீய சுகாதாரமே வெகுவாய்க் கெடுகிறது. நெய் பால் முதலிய சத்துள்ள ஆகாரங்களை உபயோகிக்க முடியாத ஏழை மக்களுக்கு மில்லரிசி உண்பது சுயமாக வருவித்துக் கொண்ட பஞ்சமேயாகும். சாரமில்லாத மில்லரிசிச் சோற்றை உண்பதனால் பெரிபெரி (Beri-beri) என்ற ஒரு நோய் ஏற்படுகிறது. மில்லரிசியைப் போன்றே மில்லிலரைக்கப்படும் மாவும் பலவித நோய்களுக்குக் காரணமாகிறது.

இவ்வியந்திரப் பிசாசுகள் நம் கிராமங்களில் வந்த பிறகே நம் கிராம வாழ்க்கை சீர்கேடுற்றது. கிராமத்தில் பல ஏழைமக்கள் வேலையில்லாமல் தங்கள் ஊதியத்தை இழந்தனர். நூல் நூற்றல், ஆடை நெய்தல் முதலிய தொழில்கள் குன்றியதே போன்று அரிசி குத்தும் தொழிலும் அளவிலாமற் குன்றிப்போய் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டு அதனால் ஏழைமையும் பஞ்சமும் தவிப்பும் கிராமங்களில் உண்டாகி விட்டன. நாம் எல்லோரும் சாரமான ஆகாரத்தையே அடியோடு மறந்து அவனியில் அல்லலுறுகின்றோம்; தேக வலிமை இழந்தோம்; பல பிணிகளுக்கு ஆளானோம்; சுகாதாரமற்றோம்; அறிவு மிழந்தோம்.

நம் நாட்டில் இற்றைக்கு முப்பதாண்டுகட்குமுன் வரையில், சாமானிய ஜனங்கள் மிராசுதார்களிடம் நெல்லை நேரேவிலைக்குவாங்கி அதனைத் தாங்களே வேகவைத்துக் குத்தித் தங்கள் தலையில் சுமந்து கொண்டு வந்து பட்டினங்களிலுள்ள ஜனங்களுக்கு நேரில் விலைக்கு விற்றுவந்தார்கள். இதனால், ஏழைமக்களுக்கு அன்றாடம் அவர்கள் செய்யும் தொழிலுக்கேற்ற வரு

வாயும் அவர்களிடம் நேரில் வாங்கும் பட்டினவாசி களுக்கு இலாபமும் சௌகர்யமும் கிடைத்துவந்தன.

சாமானிய மக்கள் இந்த வேலையைச் செய்வதனுல், அவர்களுடைய செட்டிற்கும், தேகபலத்திற்கும் நல்ல நேரம்போக்குவதற்கும் இஃது முக்கிய காரணமாயிருந்ததால் தமிழ்க் காவியங்களில் இந்த நெல் குத்துதல் தொழிலைப்பற்றி வித்துவான்கள் பெரிதும் பாராட்டியிருக்கிறுர்கள்.

பரணி பிரபந்தத்தில் சும்முலக்கைப் பாட்டும், இதர பிரபந்தங்களில் திருச்சுண்ணப் பாட்டும், மிக்க அழகோடு பாடப்பட்டிருக்கின்றன. அன்றியும், மங்கைமார்கள் உல்லாசமாய்ப் பொழுதுபோக்கற் பொருட்டு இத்தொழிலை மேற்கொண்டிருப்பது கீழ்வரும் செய்யுள்களால் அறியப்படும்.

"பவள வுலக்கை கையாற் பற்றித்
தவள முத்தங் குறுவாள் சேங்கண்
தவள முத்தங் குறுவாள் சேங்க்ண்
குவளை யல்ல கோடிய கோடிய."

சிலப்பதிகாரம்.

"குற்ற பாகு கோழிப்பவர் கோணேறி
கற்றி லாத கருங்கண் ணுளைச்சியர்
முற்றி லார முகந்துதம் முன்றிலிற்
சிற்றில் கோலிச் சிதறிய முத்தமே."

கம்பராமாயணம்.

இவ்வாறு தாய்மார்கள் இத்தொழிலை மனமகிழ்ச்சியோடு புரிந்துவருவதைக் கண்ணுற்ற சிறுபெண்கள் நெல் குற்றி விளையாடுதலையும் அத்தொழிலுக்கேற்ற உயர்ந்த கருவிகளையும்,

மரக தத்திரு லம்மிகள்
வைரவா ளுலக்கை
உரல்கள் வெள்ளியா லடுப்பகில்
விறகுலை பனிநீர்
அரிசி முத்தழல் செம்மணி
யடுகலன் பிறவும்
எரிபோ ஞலிழைத் தாடுபே
விவர்சிறு மகளிர்.

என்ற திருவிளையாடற் செய்யுளிற் கண்டுகொள்ளலாம.

நம் நாட்டுக்கைத்தொழில்களை அபிவிருத்திசெய்ய மஹாத்மா காந்தி முதலிய பெரியோர்கள் முயன்றுவருகிறார்கள். அரிசி குத்துவதும் ஒரு சிறந்த கைத்தொழிலாகையால் அதை விருத்திசெய்யும்பொருட்டும், அரிசியிலுள்ள சாரத்தை முற்றிலும் நாமெல்லோரும் பெற்றுத் தேகாரோக்கியத்தோடு உயிர் வாழும்பொருட்டும், கணக்கற்ற ஏழைமக்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கும்பொருட்டும், சாமானிய ஜனங்கள் பாடுபடவேண்டியது அவசியம். துரைத்தனத்தாரும் இச் சிறந்த கைத்தொழிலைப் புனருத்தாரணம் செய்ய முயலவேண்டும்.

இவற்றின் அவசியத்தை உத்தேசித்தே சீகாழி தெற்குவீதி குருபூஜை மடத்தில் நாளது தாதுஹூ சித்திரைமீ 22உ (4—5—1936)ல் கைக் குத்தரிசிப் பண்டகசாலை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இப் பண்டகசாலையில் ஏழை ஜனங்களாகிய சிவஜனங்கள், ஹரிஜனங்கள் ஆதியோர் தாங்களே நெல்லைப் பக்குவம் செய்து குத்திக் கொண்டுவருகிற அரிசிகளுக்கு முறையே சிவஜன அரிசி என்றும், ஹரிஜன அரிசி

என்றும் பெயரிட்டு அவைகளைக் காலக்கிரமப்படி விலைக்கு வாங்கி, வாங்கிய அந்த விலைக்கே மஹாஜனங்களுக்கு விற்க ஏற்பாடு செய்திருக்கிறோம். எங்கெந்த அரிசியை யார் யார் விரும்புகிறார்களோ அந்தந்த அரிசியை அவரவர்கள் தங்கள் தங்கள் இஷ்டப்படியே வாங்கிக்கொள்ளலாம். இப்பண்டகசாலை மூலம் அரிசி வாங்குகிறவர்களுக்கு இலாபமும் சர்க்கார் முத்திரைப் படிஅளக்கும் அளவும் நேர்மையாகவிருக்கும்.

இவ்விதமாகவே இதர நகரங்களிலுள்ள பிரமுகர்களும் கைக்குத்தரிசிப் பண்டகசாலைகளை ஏற்படுத்தி நம் நாட்டுக் கைத்தொழிலை விருத்திசெய்வார்களென்று எதிர்பார்க்கின்றோம்.

PRINTED AT THE KUMARAN PRESS, SHIYALI.

கைக்குத்தரிசிப் பண்டகசாலை

திறப்புவிழாக் காலத்தில்

# பிரசுரிக்கப் பெற்றது.

திருத்தொண்டர் குருபூஜைமடம்,

தெற்கு வீதி, சீகாழி.